பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 29 சனிக்கிழமை 12.04.2025 கதிர் 155

## இனி இது ரகசியம் அல்ல!

கொழும்பு மாநகர சபை உட்பட பல சபைகளுக்குத் தேர்தல் நடத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்திருந்தாலும் இந்தச் சபைகளில் எல்லாம் ஆளும்தரப்புத் ☞ 2

# பொருளாதார மறுசீரமைப்புகளை இலங்கை தொடர்வது அவசியம்

### சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

சமகால வெளியக அழுத்தங்களும், நிலைமாற்றமடைந்துவரும் உலகளாவிய போக்குகளும் ஏற்கனவே தீவிர நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீண்டுவரும் இலங்கை பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மைகளைத்தோற்றுவித்திருக்கின்றன. இந்நிலையில்மிகக்கடினமுயற்சியினால் வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கும், நுண்பாகப்பொருளாதாரஸ்திரத்தன்மை மற்றும் உயர் வளர்ச்சி என்பவற்றை உள்ளடக்கிய பாதையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டுசெல்வதற்கும்தற்போதைய மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டியது



அவசியமாகும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ☞ 8

## 2025இல் பொருளாதாரம் 3.9 வீதம் வளர்ச்சிபெறும்

### ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறல்

இவ்வாண்டு இலங்கையின் பொருளாதாரம் 3.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்யும் என ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்வுகூறியுள்ளது. ☞ 8

## பலாலி வீதியை திறந்தது வாக்குகள் பெறும் முயற்சி

### நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

பலாலி வீதியை கடுமையான கட்டுப்பாட்டு நிபந்தனைகளுடன் ஆளும்தரப்பு திறந்திருப்பது தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சி போன்றுதோன்றுகின்றது. தேர்தல்களைவிட ☞ 2

## கெஹெலிய, ரொஷான் சிஐடியில் வாக்குமூலம்

முன்னாள் அமைச்சர்களான ரொஷான் ரணசிங்க, மற்றும் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சி.ஐ.டி.) நேற்றயைதினம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, விளையாட்டுஅமைச்சராகஇருந்தகாலத்தில் இடைக்கால கிரிக்கெட் நிர்வாகக் குழுவில் நியமிக்கப்பட்ட நிஜாம் ஜமால்தீனுக்குச் சொந்தமான மாத்தறை வெலிகமவில் ☞ 8

## இலஞ்ச, ஊழல் விசாரணைக்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு

இலஞ்சஊழல்ஆணைக்குழுவில்ஏப்ரல் 17 அன்று முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

அழைப்பையேற்று வாக்குமூலம் அளிப்பதற்குதான் தயாராக உள்ளார் என்று ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் ஊவா மாகாண முதலமைச்சராக சாமர சம்பத் தசநாயக்க கடமையாற்றியபோது பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்குவதற்காக மாகாண சபை ஊடாக வங்கியிலிருந்து 10 இலட்சம் ரூபாவைக் காசோலையாகப் பெற்று அதனைப் பணமாக மாற்றி தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்தி ஊழலில் ☞ 2

# வடக்கு மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையைப் பாதுகாப்போம்

### பிரதமர் ஹரினி ஊர்காவற்றுறையில் தெரிவிப்பு



மாகாணசபைத் தேர்தலை வெகு விரைவில் நடத்துவதற்கு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். வடக்குமண்பலபிரச்சினைகளையும் குருதியையும் கண்டுள்ளது. அவற்றை ஆற்றுப்படுத்துவதற்கான பொறுப்பு எமக்குள்ளது. அதற்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் வெளிப்படையான தன்மையுடன் மேற்கொள்வோம். வடக்கு மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை நிச்சயமாக பாதுகாப்போம் என பிரதமர் கலாநிதி ஹரினி ☞ 2

## மிகவலுவான சர்வதேச உறவுகள் தற்போது உருவாக்கப்பட்டுள்ளன


### அக்கரைப்பற்றில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஆளும்தரப்பு தற்போது வலுவான சர்வதேச உறவுகளை ஏற்படுத்தியுள்ளதாக அக்கரைப்பற்றில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்தியா, சீனா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்குத் தான் இதுவரையில் சென்றுள்ளார் எனவும் செப்டம்பரில் ஜப்பானுக்குச் செல்லவுள்ளார் என்றும் ஜனாதிபதி கூறினார்.

'முதன்முறையாக, நாட்டைக் கட்டியெழுப்பும் ஒரு ஆளும்தரப்பு அமைக்கப்பட்டுள்ளது. முன்பு, அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஆட்சிகள் ☞ 2

## தேசிய ஊழல் ஒழிப்பு திட்டத்துக்கு கரு ஜயசூரிய அமோக வரவேற்பு



நாட்டின் துரித முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கில் தேசிய ஊழல் ஒழிப்பு செயற்திட்டமொன்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதையும், அதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமைத்துவம் வழங்கி செயற்படுவதையும் பெரிதும் வரவேற்பதாக சமூக நீதிக்கான ☞ 8

## கேப்பாப்பிலவு முகாம் காணிகளையும் ஜனாதிபதி உடன் விடுவிக்கவேண்டும்

### ஒரு வருடத்தின் பின்னர் அந்த மக்கள் மீண்டும் மனு

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவித்துத்தருமாறு ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவிடம் மக்கள் வலியுறுத்தியுள்ளனர். இது தொடர்பான தமது கோரிக்கை மனுவை கேப்பாபிலவு கிராம மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் அரச அதிபரிடம் கையளித்திருந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி போர் முடிந்து காணிகள் விடுவிக்கப்படத் தொடங்கிய காலத்திலிருந்து கோரி வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடமும் உயர் அதிகாரிகளிடமும் கடந்த வருடமும் மனு ஒன்றினை கையளித்திருந்தனர்.

அதற்குத் தீர்வுகள் கிடைக்கப்பெறாத நிலையில் நேற்று வியாழக்கிழமை கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று ஜனாதிபதியினுடைய மூத்த உதவிச் செயலாளரைச்சந்தித்துகலந்துரையாடினர். அப்போது கேப்பாபிலவு மக்களின் கோரிக்கை தொடர்பில் ஆவணங்கள் எவையும்தமது அலுவலகத்திற்குக் ☞ 2

## டிப்பர்களால் யாழ்ப்பாணத்தில் 2 விபத்துக்களில் 2 பேர் சாவு

யாழ். மாவட்டத்தில்நேற்று இருவேறு விபத்துக்களில் டிப்பர்கள் மோதியதில் இருவர் உயிரிழந்தனர். வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் ஒரு விபத்தும் யாழ். நகரிலிருந்து 5 கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ளதிருநெல்வேலியில் ஒரு விபத்தும் இடம்பெற்றன. வடமராட்சியில் ஆண் ஒருவரும் திருநெல்வேலியில் பெண் ஒருவரும் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பனில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச்செலுத்திச்சென்ற சென்ற வடமராட்சி கிழக்கு, மாமுனை, செம்பியன்பற்றைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் (வயது 39) உயிரிழந்தார்.

விபத்தில்படுகாயமடைந்த அவரைவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

தனது பரப்புரைகளை நிறுத்தவில்லை, தொடர்ச்சியாகத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது என்பதை நேற்று இந்தப் பத்தியில் கூறியிருந்தேன். இதன் பின்னணியில் ஏதாவது இருக்கக்கூடும் என்றும் சந்தேகம் கிளப்பியிருந்தேன்.

இந்த நிலையில் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலை நடத்த விதிக்கப்பட்ட தடையை நீக்கி உத்தரவிட்டது. இந்தச் சபைகளில் வேட்புமனுக்களை ஏற்பதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்த சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்று தனது ஆட்சேபனைகளை விலக்கிக்கொண்டு நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில், குறிப்பிட்ட சபைகளில் நிராகரிக்கப்பட்டு அதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்ட வேட்புமனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளும்படி உத்தரவிட்ட நீதிமன்றம் தேர்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கி உத்தரவிட்டது.

ஆக மொத்தத்தில் எப்பாடு பட்டாவது, எந்த வழியிலாவது கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலை நடத்தி அதனைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பகீரதப் பிரயத்தனத்தில் ஆளும்தரப்பு இருக்கின்றது என்பது கண்கூடு. நீதிமன்ற உத்தரவு வெளியானதை அடுத்து பிரான்ஸிலிருந்து முன்னாள் பத்திரிகையாள நண்பர் ஒருவர் அழைப்பெடுத்தார். ''நீங்கள் எழுதியது இப்படித்தான் நடக்கப் போகின்றது என்கிற உள்வீட்டு விவகாரங்களைத் தெரிந்துகொண்டுதானா? அப்படியென்றால் அவர்கள் என்னதான் முன்கூட்டியே முடிவு செய்திருந்தார்கள் என்பதையும் எழுதியிருக்கலாமே'' என்று கேட்டார். ''இல்லை, ஆளும்தரப்புக்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கும் இடையிலான ஊடாட்டம் குறித்து என்னிடம் எந்தத் தகவலும் இருக்கவில்லை. அதுபற்றி நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் கொழும்பு மாநகர சபைக்கு நிச்சயம் தேர்தல் நடக்கும் என்பதில் ஆளும்தரப்பினர் மத்தியில் உறுதியான நிலைப்பாடு இருந்தது. அதனால் பின்னணியில் ஏதோ நடக்கிறது என்கிற நியாயமான சந்தேகம் மட்டுமே என்னிடம் இருந்தது'' என்று பதிலளித்தேன். ''யாழ்ப்பாணத்தவர்கள் இப்போது தேசிய மக்கள் சக்திக்கு வால் பிடிக்கத் தொடங்கிவிட்டீர்கள், உண்மை தெரிந்தாலும் சொல்லமாட்டீர்கள்தானே'' என்று அவர் ஒரு கிண்டல் விட்டார். ''யாழ்ப்பாணத்தில் பலர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அப்படி மக்களை வாக்களிக்கப் பண்ணுவதற்காக நீங்கள் புலம்பெயர்ந்தவர்கள் பலர் பின்னணியில் செயற்பட்டதைவிடவா, யூடியூப்பர்களுக்குப் பணம் அனுப்பி பரப்புரை செய்ததைவிடவா, யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்து ஆதரவு தெரிவித்ததைவிடவா நாங்கள் ஏதாவது செய்துவிடப் போகின்றோம்'' என்று பதிலுக்குக் கிண்டலடித்துவிட்டு அழைப்பைத் துண்டித்துவிட்டேன். இல்லையென்றால் தனது சுத்தபத்தம் குறித்தும் தூய தமிழ்த் தேசிய ஆதரவு நிலைப்பாடு குறித்தும் அவர் எனக்கு மணித்தியாலக்கணக்கில் வகுப்பெடுப்பார் என்பது எனக்குத் தெரியும். அவர் தமிழ்த் தேசியவாதி என்பதற்காக உண்மைகள் இல்லையென்றாகிவிடாதுதானே!

அது ஒருபுறமிருக்க, வேட்புமனுக்கள் நிராகரிப்பில் தேவையற்ற வகையில் சட்ட நுணுக்கங்களைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்காமல் ஓரளவிற்கு ஏற்கக்கூடிய வேட்புமனுக்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு தேர்தலை நடத்தி முடிக்கலாம் என்கிற சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிலைப்பாட்டுக்கும் தேர்தல் ஆணைக்குழுவிற்கும் இடையில் முரண்பாடுகள், விரிசல்கள் விழுவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன.

உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் வேட்புமனு நிராகரிப்புத் தொடர்பில் முரண்பட்ட உத்தரவுகளை வழங்கியிருக்கின்ற நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தேர்தல் ஆணைக்குழு மேன்முறையீடு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் ஒரு வாரமாக அத்தகைய மேன்முறையீடு செய்யப்படவில்லை. அதற்குப் பதிலாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கொழும்பு மாநகர சபை உட்பட 18 சபைகளில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் தமது ஆட்சேபனைகளை விலக்கிக்கொண்டு வழக்காளிகள் கேட்ட நிவாரணத்தை வழங்க சட்டமா அதிபர் திணைக்களம் ஏற்கனவே ஒரு நிலைப்பாடு எடுத்திருக்கும் நிலையில், இன்று தேர்தல் ஆணைக்குழு கூடுகின்றது. அதில் ஏகமனதான ஒரு முடிவு எட்டப்படுவது துர்பலம் என்பதை குழுவின் உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே கோடிகாட்டியிருக்கின்றார். அவரது கருத்துப்படி தேர்தல் ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்தாக வேண்டும். ஆனால், ஏனைய உறுப்பினர்கள் சட்டமா அதிபர் திணைக்களம் சொல்வதைப் போல வழிகாட்டுவதைப் போல தேர்தலை நடத்துவதற்கு ஆதரவாக இருக்கலாம் என்கிற நிலைப்பாட்டில் உள்ளனர் போலுள்ளது. எனவே தேர்தல் ஆணைக்குழு என்ன நிலைப்பாடு எடுக்கப்போகின்றது என்பது இன்று தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்தார்.

கரைநகரில் நேற்று மக்கள் சந்திப்பு என்ற பெயரில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:

கரைநகர் மண்ணிற்கு வருகை தந்தமையையிட்டு மகிழ்ச்சிடைகிறேன். இந்த மண் பல பண்பாட்டு கலாசாரங்களைக் கொண்டுள்ளது. இதனை முன்னெடுத்துச்செல்லவேண்டும். ஆளும்தரப்பு என்ற ரீதியில் அதற்கான பங்களிப்பை வழங்குவோம்.

1977ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காரைத்தீவு மண்ணில் சுமார் 80 ஆயிரம் பேர் வாழ்ந்தார்கள். ஆனால் இன்று சுமார் 10,500 பேர் மாத்திரமே வாழ்கிறார்கள். இந்த மண்ணில் பல திறமையானவர்களும் பண்டிதர்களும், கல்விமான்களும் தோற்றம் பெற்றார்கள். அவர்கள் பல்வேறு காரணங்களால் நாட்டை விட்டுச்சென்றுள்ளனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவார்கள் என நாம் நம்புகிறோம். ஆதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக்கொடுப்போம். சரியான வசதிகளும் அபிவிருத்திகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதன் ஊடாக இப்பிரதேசத்தை மேம்படுத்த முடியும். ஆகவே உரிமம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நாம் வழங்குவோம்.

தென்பகுதியில் உள்ள மக்கள் இப்பகுதி மக்களை நேசிக்கிறார்கள். ஆனால் இந்த மக்களின் அடிப்படை பிரச்சினைகளை முகங்கொடுக்கிறார்கள். அதற்கு பல காரணங்கள் உள்ளன. கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய பல துறைகளில் பற்றாக்குறை உள்ளதை நான் அறிவேன். போர் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றன. இதற்கு நாங்கள் அரச நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாக தீர்வைப்பெற்றுக்கொடுப்போம்.

2024 ஆம் ஆண்டு மக்ள அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுத்தனர். ஊழல் அற்ற ஆளும்தரப்பைத் தெரிவு செய்தார்கள். அதைப்போன்று நாடாளுமன்ற அதிகாரத்தை முழுமையாக எமக்களித்தார்கள். நடைபெறவுள்ள உள்ளுராட்சிமன்றத் தேர்தலில் நாட்டு மக்கள் இன, மத விடயங்களுக்கு அப்பாற்பட்டு திறமையான மற்றும் ஊழலற்றவர்களை தெரிவு செய்ய வேண்டும். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கு நாம் முன்னுரிமையளித்துள்ளோம். ஸ்திரமான நிலையில் இருந்துகொண்டுதான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும். அரச சேவையானது நாட்டு மக்களுக்கு வினைத்திறனதாக அமையவேண்டும். அதற்குசாதகமாக சூழலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம். அரசியல் தலையீடுகள் இல்லாமல் அரச சேவை தற்போது சுயாதீனமாக இடம்பெறுகிறது. மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு தேவையான முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

ஆளும்தரப்பு என்ற ரீதியில் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு என்றும் முன்னுரிமையளிப்போம். இந்த மண் பல பிரச்சினைகளையும் குருதியையும் கண்டுள்ளது. அதனை ஆற்றுப்படுவதற்கான பொறுப்பு எமக்குண்டு. அதற்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் வெளிப்படையான தன்மையுடன் மேற்கொள்வோம். வடக்கு மக்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நிச்சயமாக பாதுகாப்போம் என்றார்.

## பலாலி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசத்தின் பாதுகாப்பிற்கே ஆளும்தரப்பு முன்னுரிமையளிக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார் பலாலி வீதி திறக்கப்பட்டமை தொடர்பிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-:

வடபகுதி மக்களின் உணர்வுகளுடன் அசிங்கமான அரசியலில் ஈடுபடுவதை தேசிய மக்கள் சக்தி கைவிடவேண்டும். பலாலி வீதியை கடுமையான கட்டுப்பாடுகளுடன் ஆளும்தரப்புத் திறக்கத் தீர்மானித்துள்ளமை உண்மையாகவே கரிசனையளிக்கின்றது.

அந்த வீதி பாதுகாப்பு காரணங்களிற்காக மூடப்பட்ட போதிலும் ஆளும்தப்பு, பாதுகாப்புச் சரிபார்ப்பில் ஈடுபடாமல் இந்த வீதியை திறந்துள்ளது. இதன் காரணமாகவே கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இது அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் புறக்கணித்து தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சி போல தோன்றுகின்றது. இவ்வாறான விடயங்களை செய்யவேண்டாம் என ஆளும்தரப்பை வலியுறுத்தும் நான் தேர்தல்களைவிட தேசத்தின் பாதுகாப்பிற்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

வீதியைத் திறக்கவேண்டும் என்றால் முழுமையான பாதுகாப்புச் சரிபார்ப்பிற்கு பின்னரே அதனைத் திறக்கவேண்டும், மேலும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு எந்தவித தடைகளும் கட்டுப்பாடுகளும் இல்லாத வகையில் அதனை திறக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## இலஞ்ச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பல விடயங்களை அறிந்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வியாழக்கிழமை (10) சாமர சம்பத் தசநாயக்க தொடர்பாக அறிக்கையொன்றையும் வெளியிட்டிருந்தார். எனவே, இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவதற்காக ஏப்ரல் 17 அன்று காலை 9.30 மணிக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்புவிடுக்கத்துள்ளது.

இலங்கை வங்கியிடம் இருந்து 10 இலட்சம் ரூபாவை அனுசரணைத் தொகையாகப் பெற்று தனிப்பட்ட மன்ற கணக்குக்கு மாற்றியமை, மக்கள் வங்கியிடம் இருந்து 25 இலட்சம் ரூபாவை பெற்று அவ்வாறு தனிப்பட்ட மன்ற கணக்குக்கு மாற்றியமை தொடர்பில் முதல் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

முன்பள்ளி மாணவர்களுக்கு புத்தக பை வழங்கவென, தேசிய சேமிப்பு வங்கியிடம் அனுசரணை கோரி, அது நிராகரிக்கப்பட்ட பின்னர், அவ்வங்கியில் ஊவா மாகாண சபை முன்னெடுத்துச் சென்ற நிலையான வைப்புக் கணக்குகள் 6 இனை அகற்றிக் கொண்டமை ஊடாக அரசுக்கு 173 இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தியமை குறித்து மூன்றாவது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கேப்பாப்பிலவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை என உதவிச் செயலர் கூறியிருந்தார்.

இதனையடுத்தே இன்றையதினம் கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் உமாமகேஸ்வரனிடம் மீண்டும் தமது கோரிக்கை மனுவைக் கையளித்தனர். ஜனாதிபதி செயலகத்தில் வழங்கப்பட்ட விளக்கங்களைத் தெரிவித்தே இந்த மனுவை அவர்கள் மாவட்டச் செயலரிடம் கையளித்தனர்.

இருப்பினும், இதற்கு முன்னர் அந்த மக்கள் தம்மிடம் வழங்கிய மனுவைத் தாம் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தார் என்பதை அந்த மக்களிடம் உறுதிப்படுத்திய மாவட்டச் செயலர், அதற்காக ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில் கடிதத்தையும் மக்களிடம் காண்பித்தார்.

கேப்பாபிலவில் இலங்கை வான்படையினர் முகாம் அமைத்து உள்ளனர். அதில் அடங்கியுள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்டபோதிலும் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள், தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்றும் இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன.

மக்களின் பயன்தரு தென்னை மரங்கள் பலகுறித்தகாணியிலேயேகாணப்படுகின்றன. 62 நபர்களின் 171 ஏக்கர் காணிகள் தற்போது விடுவிக்கப்படாது இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பலவருடகாலமாகதாம்தமது காணிகளை இழந்துசிரமங்களுக்குமத்தியில்வாழ்கின்றனர் என்றும்பலபோராட்டங்கள்செய்தும்இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுததுகின்றனர்.

தற்போது மாவட்டச் செயலரிடம் வழங்கப்பட்டுள்ள மனுவிற்கு விரைவில் உருப்படியான பதில் ஏதும் கிடைக்கவில்லையாயின் மீண்டும் போராட்டத்தில் குதிப்பதைத் தவிர்க்க முடியாது என்றும் தெரிவித்தனர். ஏப்ரல் 26 ஜனாதிபதி அனுரகுமார திசநயாக்கா முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிற்கு வருகை தர இருப்பதனால் அவரிடமும் தான் இந்த மனுவைக் கையளிக்க இருக்கின்றனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் 34 வருடங்களின் பின்னர் பாலாலி வீதியில் முகாம் பகுதியூடாக கடுமையான கட்டுப்பாட்டு நிபந்தனைகளுடன் பொதுப் போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தமது காணிகளும் விடுவிக்கப்படவேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மிகவலுவான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்பட்டன. இப்போது மக்களால் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொருளாதார நெருக்கடியை நாம் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைத்துள்ளோம். டொலர் மதிப்பு குறையும்போது ஒரு மதிப்பும், உயரும்போது மற்றொரு மதிப்பும் இருந்தது. இன்று, டொலரின் மதிப்பை 300 ரூபாயில் பராமரிக்க முடிந்துள்ளது.

அதாவது பொருளாதாரம் நிலையானது. வட்டிவிகிதம் 30 முதல் -35% ஆக உயர்ந்தது. இன்று, அது பத்து சதவீதத்திற்கும் குறைவாகவே வைக்கப்பட்டுள்ளது. இது பொருளாதார ஸ்திரத்தன்மையின் அடையாளம்.

நிறுத்தப்பட்ட அந்நிய முதலீடுகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இந்திய, ஜப்பானிய மற்றும் சீன அரசுகள் தடைபட்டிருந்த தமது அனைத்துத் திட்டங்களையும் மீண்டும் தொடங்க முடிவு செய்துள்ளன.

பொலிஸில் தமிழ் பேசும் அதிகாரிகள் பற்றாக்குறை உள்ளது. அதனை நிவர்த்தி செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்போம். அரச பணியாளர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றது. வரலாற்றில் மிக உயர்ந்த சம்பள உயர்வு அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான செயற்திட்டத்தலைவர் எவான் பபஜோர்ஜியோ தலைமையிலான அதிகாரிகள் குழு ஏப்ரல் 3 இலங்கைக்கு வந்திருந்தது. நேற்று வரை நாட்டில் தங்கியிருந்து ஜனாதிபதி உட்பட ஆளும்தரப்பின் உயர் மட்டப் பிரதிநிதிகள், இலங்கை மத்திய வங்கி ஆளுநர், திறைசேரியின் செயலாளர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# வருடங்களில் கைப்பணித்துறை ஊடாக உலக சந்தையில் ஒரு பில்லியன் டொலர்களைக் கைப்பற்றுவதே எமது இலக்கு

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(சுபேசன்)

5 வருடங்களில் கைப்பணித்துறை ஊடாக உலக சந்தையில் ஒரு பில்லியன் டொலரைக் கைப்பற்றுவதே எமது இலக்கு என பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

பனைசார் பெண் கைப்பணியாளர்களை உருவாக்கும் முனைப்பில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பத்து நாள் பயிற்சிநெறி குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

பனைசார் கைப்பணி உற்பத்தித்துறையில் புது சகாப்தம் படைக்கப்படவுள்ளது. பனம் பொருள்கள் மூலம் சர்வதேசதரத்திலான கைப்பணி உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நட்சத்திர விடுதிகள், சர்வதேச சந்தைகளைக் கைப்பற்ற பனை அபிவிருத்திச்சபை இலக்கு வைத்துள்ளது.

வெறுமனே 5 லட்சம் பனை மரங்களைக் கொண்டுள்ள பங்களாதேஷ் நாட்டில் பனை சார்ந்த உற்பத்திகள் சர்வதேசதரத்தில் செய்யப்படுகின்றது.

எமது நாட்டில் ஒரு பனை மட்டை மூலம் பெண் ஒருவர் உள்ளூர் சந்தையில் 1500 ரூபா பெறுமதியான கைவினைப் பொருளைத் தயாரிக்க முடியும்.அந்தப் பொருளுக்கான கேள்வி சர்வதேச சந்தையில் 5000ரூபா வரை நிலவுகின்றது. இயற்கையான பொருள்களுக்கான சந்தைவாய்ப்பு அதிகரித்து வருகின்றது.

உலகசந்தையில்இலங்கையினுடையகைப்பணித் துறைக்கு மிகப்பெரியதொரு வரவேற்பு உள்ளது. சுற்றுலாப் பயணிகள் இரட்டிப்பாகியுள்ள இந்தத் தருணத்தில் பனை சார்ந்த கைம்பணிப் பொருள்களை சந்தைப்படுத்த பெரும் வாய்ப்பு உள்ளது.

பனைசார்ந்தபெண்கைப்பணியாளர்களுக்கான பத்துநாள்பயிற்சிநெறியின்போதுஎமதுஉற்பத்திகளை அமெரிக்காவிற்கு சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வாறான பயிற்சிகள் ஊடாக பெண் தலைமையிலான குடும்பங்களுக்கு சிறந்த



தொழில்வாய்ப்புக் கிடைக்கின்றது.

பெண்களுக்கானமுக்கியமானதொழிற்துறையாக பனை சார் கைப்பணிப் பொருள் உற்பத்தி மாற்றமடையும். ஓய்வு நேரத்தை வீணாக்காமல் வருமானம் ஈட்டக்கூட்டிய துறைகளில் ஈடுபட வேண்டும் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# கெக்கரி வயல் அறுவடை விழா

கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் புளியம்பொக்கனை கமல சேவை பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம் பகுதியில் கெக்கரி கண்ணுருவையிட் என்னும் புதிய வகை இனம் பரீட்சாத்தமாக முதன்முறையாக மாவட்டத்தில் தருமபுரம் பகுதியில் விவசாயி ஒருவரால் நடுகை செய்யப்பட்டு அதன் அறுவடை விழா நடைபெற்றது.

குறித்த அறுவடை நிகழ்வில் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர்,வி.சோதிலட்சுமி, பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயபோதனாசிரியர்கள் விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர், வி.சோதிலட்சுமி , அவர்களின் கட்டும் உள்ளது. இதன் போது விவசாயிகள் தெரிவிக்கையில் -

தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வகை கெக்கரி இனத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் விற்பனை செய்வதில் பெரும் சிரமங்கள் உள்ளன எனவும் வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுமாயின் சிறந்த விளைச்சலையும் லாபத்தையும் பெற முடியும் எனவும் தெரிவித்தனர்.

இதற்கு அமைவாக கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர் கூறுகையில்பாரிய அளவில் உற்பத்தி செய்யப்படுமாயின் ஏற்றுமதி செய்வதற்கான சந்தை வாய்ப்பினை பெற்று தர முடியும் எனவும் தெரிவித்தார். 316





# கதிர்காமம் பாதயாத்திரைக்கான ஏற்பாடுகள் சகலதும் தொடக்கம்

(சகாதேவராஜா)

இலங்கையின் மிக நீண்ட யாழ்ப்பாணம் கதிர்காமம் பாதயாத்திரை மே மாதம் 30 ஆம் ஆம் ஆரம்பமாகிறது.

யாழ்.செல்வச்சந்நதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் ஜெயா வேல்சாமி தலைமையிலான மிக நீண்ட 59 நாள் பாதயாத்திரை யூலை மாதம் 26ஆம் திகதி கதிர்காமத்தை சென்றடையும்.

அதற்கான முன் ஏற்பாடு ஒழுங்கு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இப் புனித பாதயாத்திரைக் குழுவில் பக்திபூர்வமான முறையில் பங்குபெறவிரும்பும் அடியவர்கள் ( 0763084791 ) குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

மகிமைகள் பொருந்திய இவ்வருட





2025 கதிர்காம ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 26 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு ஓகஸ்ட் 9 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் பங்குனி உத்தரப் பொங்கல் விழா

வரலாற்று சிறப்பு மிகு கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப்பொங்கல் சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

வரலாற்று சிறப்பு மிகு கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடார்ந்த பங்குனி உத்தரப்பொங்கல் நிகழ்வுகள்சிறப்பாகஇடம்பெற்றுவருகிறது.

பகல்இரவுபொங்கலாகஇடம்பெறுகிறது.

வடமாகாணத்தின்பலபகுதிகளிலிருந்தும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருமாளவான அடியவர்கள் தங்களுடைய நேர்த்திகளை காவடிகளாகவும், பாற்ச்செம் பாகவும், தூக்கு காவடி, பறவைக்காவடி, பொங்கலாகவும் நிறைவேற்றி வருகின்றனர்.

அடியவர்களின்நலன்கருதிபோக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதார வசதிகள் அனைத்தும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் புத்தூர் சந்தியிலிருந்து புறப்பட்ட பண்டவண்டில்கள் மாலை ஆலயத்தை





வந்தடைந்தவுடன்பண்டகங்கள்எடுக்கப்பட்டு வந்து வைத்தலுடன் பாரம்பரிய பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. 113

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## புத்தாண்டு சவால்கள்

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் முதலாவது பௌத்த, இந்து புத்தாண்டு தயாராகி வரும் நிலையில், அது மக்களுக்கு குழப்பமான அறிகுறிகளையே தருகின்றது. பொதுவாகப் புத்தாண்டு என்பது நம்பிக்கைக்குரிய எதிர்பார்ப்பைக் கொண்டுவருவதாக நம்பப்படும் மரபு பௌத்த மற்றும் இந்து மக்களிடம் உண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்கிற சொலவடை தமிழில் பிரபலம். இருந்தாலும் இந்தச் சித்திரைப் புத்தாண்டு அத்தகைய நம்பிக்கைக்குரிய எதிர்பார்ப்பைத் தருவதாக இல்லை என்பது செரிமானத்திற்குக் கடினமாது.

புத்தாண்டுக்கு ஒரு வாரம் முன்பாகத்தான் இலங்கைப் பொருள்களுக்கு 44 சதவீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்தது. இது புத்தாண்டில் பல்லாயிரக்கணக்கான வேலையாட்களின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியது. இந்த வரியை டிரம்ப் நிர்வாகம் 90 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாகத் தற்போது அறிவித்திருப்பது நிம்மதிப் பெருமூச்சுக்கு வழிவிட்டாலும் ட்ரம்பின் அறிவிப்பால், ஏற்றுமதித் தொழில்களில் முதன்மையானதான ஆடை வர்த்தகத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், புத்தாண்டு விடுமுறைக்குப் பின்னர் தமது வேலைக்குத் திரும்ப முடியாது என்ற அச்சமே மேலோங்கியிருந்தது.

இப்போது புத்தாண்டு விடுமுறைக்குப் பின்னர் குறைந்தபட்சம் அவர்கள் திரும்பும்போது வேலைகள் இருக்கும் என்று தோன்றுகிறது. ஆனால் மூன்று மாதங்களுக்கு மட்டுமே அது நிச்சமானது. அதன் பின்னர் எதிர்காலம் மீண்டும் நிலையற்றதாக மாறிவிடும் அவலத்துடனேயே, அச்சத்துடனேயே புத்தாண்டைக் கழிக்க வேண்டியதாக இருக்கின்றது.

அமெரிக்க வரி விதிப்பு கொரோனா பெருந்தொற்று, மற்றும் ஆழிப்பேரலை இடர்களை விடவும் மிகவும் மோசமான பொருளாதார இக்கட்டின் உச்சம் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்கவே விவரித்திருக்கிறார். அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்கு எதிர்க் கட்சியினரையும் கொண்ட நாடாளுமன்றக் குழு ஒன்றை அமைப்பதாகவும் அவர் உறுதியளித்திருக்கிறார். இந்த நெருக்கடியிலிருந்து இலங்கையை மீட்பதற்கு ஆளும்தரப்புக்கு முழுமையான ஆதரவை வழங்க எதிர்க் கட்சிகளும் தயாராக இருக்கின்றன. ஏற்கனவே இந்த விடயத்தைச் சமாளிக்க ஒரு குழுவை அரசுத் தலைவர் நியமித்திருக்கின்றார். இவையெல்லாம் வரவிருக்கும் பொருளாதாரப் பேரழிவைத் தடுக்கப் போதுமானவையா என்பது கேள்விக்குரியதுதான். அமெரிக்கா தொடங்கியிருக்கும் இந்தப் பொருளாதாரப் போர் வெறுமனே பொருளாதாரத்துடன் மட்டும் தொடர்புபட்டதல்ல என்பது வெளிப்படை. அதையும் தாண்டிய அரசியல் அதில் நீக்கமறப் பின்னிப் பிணைந்துள்ளதை மறுக்கமுடியாது. எனவே இவற்றையெல்லாம் கடந்து நிலமையைச் சமாளிப்பது ஆளும்தரப்புக்கு மிக முக்கிய சவால்தான்.

இதுபோன்றதொரு பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையைக் காப்பதில் முன்னாள் அரசுத் தலைவரான ரணில் விக்கிரமசிங்க திறப்படச் செயலாற்றி இருக்கிறார் என்பதை ஏற்றுக்கொண்டாகவேண்டும். மிக நெருக்கடியான நேரத்தில் அரசுத் தலைவராகப் பொறுப்பெடுத்த அவர், அடுத்த 26 மாதங்களில் அந்தப் பொருளாதாரச் சவால்களை திறம்படக் கையாண்டார். மட்டுமல்ர, 2024 செப்டம்பரில் பதவியில் இருந்து விலகும் நேரத்தில் 6 பில்லியன் டொலர் அளவுக்கு அந்நிய செலாவணி இருப்பையும் அவரால் உருவாக்க முடிந்தது. இந்தச் சாதகமான முன்னுதாரணம் தற்போதைய அரசுத் தலைவரின் தலைக்கு மேல் தொங்கும் கூரிய ஆயுதம். தற்போதைய நிலமையை அவர் சரிவர மிகத் தெளிவாகக் கையாளத் தவறினால், அந்தக் கூரிய ஆயுதம் அவரது தலையைப் பதம்பார்த்துவிடும்.

நிலமையைக் கையாள்வதிலும் பார்க்க அதனை யாரின் தலைமீது சுமத்திவிடலாம் என்பதில்தான் தற்போதைய ஆளும்தரப்பின் கவனம் இருக்கின்றதோ என்கிற ஐயம் ஏற்படுவதையும் தவிர்க்க முடியவில்லை. முந்தைய ஆட்சியாளர்கள் நாட்டின் ஏற்றுமதிக் கூடையை பன்முகப்படுத்தப் போதுமான அளவு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர் எனவும், இதனால் நாட்டை அமெரிக்காவின் தயவில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் நாடாளுமன்றத்தில் அண்மையில் ஆளும்தரப்பு குற்றம் சாட்டியது. இதற்கு எதிர்க்கட்சிகள் ஆளும்தரப்பின் மீது பதிலடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. ஜேவிபி / தேசிய மக்கள் சக்தி கூட்டணிதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்றன. எதிர்க்கட்சியில் இருந்தபோது ஒவ்வொரு வர்த்தக ஒப்பந்தத்தையும், முன்மொழியப்பட்ட ஒவ்வொரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையும் (எஃப்டிஏ) எதிர்த்த ஜேவிபிதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணம் என்றன. மேலும் அமெரிக்காவுடனான எம்.சி.சி. ஒப்பந்தம், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (இடிசிஏ) மற்றும் இந்தியாவுடனான விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் (சிஇபிஏ) போன்ற பொருளாதார ரீதியாக நன்மை பயக்கும் ஒப்பந்தங்களை ஜேவிபி எதிர்த்துவிட்டு இப்போது ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தத் தவறிவிட்டதாக முன்னைய ஆட்சியாளர்கள் மீது குற்றஞ்சாட்டுவதாக எதிர்க் கட்சிகள் கொந்தளித்தன. அவை சொல்வதிலும் அர்த்தமில்லாமல் இல்லை.

ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின்னர் ஜேவிபி இப்போது தலைகீழ் கொள்கைகளுக்கு மாறியிருப்பது வெளிப்படை. அதன் இந்திய எதிர்ப்புக் கொள்கையைத் தொடர்ந்துகொண்டே இருக்கவேண்டுமா என்ன என்று ஜேவிபியின் செயலாளர் ரிவின் சில்வாவே கேள்வி கேட்கிறார். இந்தக் கொள்கை மாற்றத்தை, யதார்த்தத்தை ஜேவிபி முன்னரே உணர்ந்திருந்தால் பொருளாதார நிலமைகள் வேறுவிதமாக முன்னேறியிருக்கவும் வாய்பிருந்திருக்கும். ஆனால், இப்போது எல்லாம் தாண்டி தலைக்கு மேலே வெள்ளம் சென்றாகிவிட்டது. நிலமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதுதான் அனைவருக்கும் உசிதமானது. அதற்கான நடவடிக்கைகள்தான் மேற்கொள்ளப்படவேண்டும். புத்திசாலித்தனமாகவும் எதிர்காலத்தை நோக்கியதாகவும் விரைந்து வளர்ச்சியைத் தருவதாகவும் இருக்கக்கூடிய பொதுவான கொள்கையுடன் முன்னேற்றத்தை நோக்கிப் பயணிப்பதே இப்போதைய தேவை. அப்படி இந்த அரசு பயணிக்கும் என்று நம்புவது மட்டுமே புது வருடத்தில் மக்களால் செய்யக்கூடியது.

# சர்வதேச ரீதியில் வர்த்தகப் போர் ஏற்படுமா?

(கலாநிதி முகம்மது அஸ்லம்)

வர்த்தகப் போர் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் ஒருவருக்கொருவர் வணிக தடைகளை விதிப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக போட்டியிடும் ஒரு சூழ்நிலையாகும். பொதுவாக, ஒரு நாடு தனது உள்நாட்டு தொழில்களைப் பாதுகாக்கவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், அல்லது பிற நாடுகளின் வணிக நடைமுறைகளுக்கு பதிலடி கொடுக்கவும் இறக்குமதி வரிகளை உயர்த்தும். இதற்கு பதிலடியாக, பாதிக்கப்பட்ட நாடும் தனது ஏற்றுமதிப் பொருள்களுக்கு வரி விதிக்கலாம். இது ஒரு தொடர்ச்சியான நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும், இறுதியில் இரு தரப்பு வணிகமும் பாதிக்கப்படும்.

வர்த்தகப் போர்கள் புதியவை அல்ல, வரலாற்றில் பல முறை நிகழ்ந்துள்ளன. ஆனால், நவீன உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில் இதன் விளைவுகள் மிகவும் பரவலானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கலாம். நுகர்வோர் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும், வணிகங்கள் தங்கள் விநியோகச் சங்கிலிகளை மாற்றியமைக்க வேண்டியிருக்கும், மேலும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படலாம்.



அமெரிக்காவின் சமீபத்திய வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த வர்த்தகப் போருக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. அமெரிக்கா, பல நாடுகளுடனான தனது வர்த்தகப் பற்றாக்குறையை காரணம் காட்டி, குறிப்பாக சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது அதிக வரிகளை விதித்துள்ளது. இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், வெளிநாட்டுப் பொருள்களை விட அமெரிக்காவில் தயாரிக்கப்படும் பொருள்களை வாங்குமாறு அமெரிக்க நிறுவனங்களையும் நுகர்வோரையும் ஊக்குவிப்பதாகும்.

இந்த வரி விதிப்புகள் உடனடியாக மற்ற நாடுகளின் எதிர்வினைகளைத் தூண்டின. பாதிக்கப்பட்ட நாடுகள் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது பதிலடி வரி விதித்தன. உதாரணமாக, சீனா அமெரிக்காவின் விவசாயப் பொருள்கள் மற்றும் பிற பொருள்களுக்கு வரி விதித்தது. ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவின் சில பொருள்களுக்கு வரி விதித்தது. இந்த பதிலடி நடவடிக்கைகள் இரு தரப்பு ஏற்றுமதி மற்றும் இறக்குமதியையும் குறைத்தன, மேலும் வணிகங்களுக்கு நிச்சயமற்ற தன்மையை அதிகரித்தன.

அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு கொள்கை, உலகளாவிய வர்த்தக அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கு சவால் விடுவதாக பல நாடுகள் கருதுகின்றன. உலக வர்த்தக அமைப்பு நாடுகளிடையே நியாயமான மற்றும் தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது. ஆனால், அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த அமைப்பின் செயற்பாட்டையும் நம்பகத்தன்மையையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

மேலும், இந்த வர்த்தகப் போர் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பல நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தை பல நாடுகளிலும் பரவலாக்கியுள்ளன. அதிக வரி விதிப்புகள் காரணமாக, இந்த நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி இடங்களை மாற்றியமைக்க அல்லது அதிக செலவுகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இது நுகர்வோருக்கு அதிக விலையாகவும், சில சமயங்களில் பொருள்களின் பற்றாக்குறையாகவும் கூட மாறலாம்.

முடிவாக, வர்த்தகப் போர் என்பது எந்தவொரு நாட்டிற்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தாது. தற்காலிகமாக சில உள்நாட்டு தொழில்களுக்கு இது பயனளித்தாலும், நீண்ட கால அடிப்படையில் இது பொருளாதார வளர்ச்சிக்கு தடையாகவே இருக்கும். அமெரிக்காவின் சமீபத்திய வரி விதிப்பு நடவடிக்கைகள் இந்த வர்த்தகப் போரை தீவிரப்படுத்தியுள்ளன, மேலும் உலகளாவிய பொருளாதாரம் இதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாடுகளிடையே பேச்சுகள் மற்றும் ஒத்துழைப்பு மூலம் மட்டுமே இந்த சிக்கலுக்கு தீர்வு காண முடியும். தடையற்ற மற்றும் நியாயமான வர்த்தகம் உலகளாவிய பொருளாதார வளர்ச்சிக்கும் அனைத்து நாடுகளின் நலனுக்கும் இன்றியமையாதது என்பதை உணர வேண்டும்.

ஆக்கம்:
(கட்டுரையாளர் இலங்கைத்திட்டமிடல் சேவை, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்)

# ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு அலுவலக தளபாடங்கள் கிட்டின

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களின் ரி-100 திட்டத்தின் கீழ் சுமார் 03 லட்சம் பெறுமதியான அலுவலக தளபாடங்கள் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான இதர உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் நிதி ஒதுக்கீட்டில் அம்பாறை மாவட்ட சகல பிரதேசங்களிலும் உள்ள பொது நிறுவனங்கள் மற்றும் மத ஸ்தாபனங்களுக்கு தேவையான அபிவிருத்தி மேம்பாட்டு வேலைகள் தொடர்ந்தேர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஓர் அங்கமாகவே மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு இந்த அலுவலக தளபாடங்கள் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான இதர உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் வெகுஜன தொடர்பாடல் செயலாளரும், காரைதீவு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு பிரதிநிதியுமான யூ.எல். நூருல் ஹுதாவின் இணைப்பில் காரைதீவில் வைத்து இந்த அலுவலக தளபாடங்கள் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்புக்கு தேவையான இதர உபகரணங்கள் மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் நிர்வாகிகளிடம் வழங்கி வைக்கப்பட்டன.







# வலய மட்ட பெண்கள் எல்லே கிளி. புனித திரேசாள் சம்பியன்

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டுக்களின் வரிசையில் பெண்களுக்கான எல்லே போட்டி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் கரியாலைநாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் புனித திரேசாள் பெண்கள் கல்லூரியும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகின.

இறுதிப்போட்டியில் புனித திரேசாள் பெண்கள் கல்லூரி அணி 5 இற்கு 1 என்ற கணக்கில் கரியாலைநாகபடுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வீழ்த்தி சம்பியனாகியது.

113



# வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை ஆரம்பம்

வவுனியாவில் 21 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

பருவகால மழை, கடந்த வருட இறுதிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் பெய்த மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் அவற்றின் நீர் கொள்ளவினை எட்டியுள்ளது.

இதன் காரணமாக கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறு போக அளவினை விட இம்முறை ஐயாயிரம் ஏக்கர் அளவில் மேலதிகமாக சிறுபோகம் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்படி 21 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது, சிறுபோக விதைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவித்தார். 100



# விசேடதேவையுடைய மாணவர்களுக்கு அட்டாளைச்சேனையில் உபகரணங்கள்

(சியாத்)

அட்டாளைச்சேனைபிரதேசசெயலகத்தின் சமூக சேவைகள் பிரிவினால் விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் டாக்டர் ஜலால்டீன் வித்தியாலத்தில் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஜி.அர்ஷாத் கலந்து கொண்டு வழங்கிவைத்தவுடன் போதை பொருள் பாவனை, சமூக பாதுகாப்பு



நிதியத்தின் கீழ் சிறுவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் தொடர்பாக சம்பந்துப்பட்ட துறை சார் உத்தியோகத்தர்களான எம்.சனீர், எல்.எல்.நஜிமுத்தீன் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்என பலரும்கலந்துகொண்டனர்.

# அந் –நுஸ்ரா பாலர் பாடசாலையில் புதிய மாணவர்கள் உள்வாங்கல்

ஜிப்ரான்)

மூதூர் நெய்தல் நகர் சமூக அபிவிருத்தி நிலையமான அந்-நுஸ்ரா தலைமையின் கீழ் இயங்கிவரும் அந் நுஸ்ரா பாலர் பாடசாலையின் இவ் வருடத்திற்கான புதிய மாணவர்கள் உள்வாங்கும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் அந் நுஸ்ரா பாலர் பாடசாலையில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வானது தலைவர் என்.எம் முஸாஹிர் செயலாளர் எஸ்.எம். ஸஹ்தி பொருளாளர் எம்.எஸ்.எம்.இர்பான் மற்றும் உறுப்பினர் என்.எம். முபாரிஸ் மற்றும் எஸ்.எம்.சர்மின் தலைமையின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக மூதூர் பிரதேச சபை செயலாளர் ஜெம்சித் மற்றும் மூதூர் சுகாதார பணிமனை அதிகாரி டாக்டர் ஹில்மி நெய்தல் நகர் கிராம உத்தியோகத்தர் மதீன் அத்துடன் நெய்தல் நகர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சப்னா அத்துடன் ஊடகவியலாளர் ஜிப்ரான் கலந்து சிறப்பித்து இருந்தனர்.

அந் நுஸ்ரா பாலர் பாடசாலையில் வருடத்திற்காக 30 மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புதிதாக உள்வாங்கப்பட்ட 30 மாணவர்களுக்கும் மாலை சூடி கௌரவிக்கப்பட்டனர்.




# ஓமந்தை விளையாட்டரங்கை விரிவுபடுத்த: விளையாட்டுத் துறை அமைச்சர் ஏற்பாடு

வவுனியா, ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்தி சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்குக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் தேவைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வன்னி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஓமந்தையில் அமைந்துள்ளது. அங்கு பல தேவைகள் காணப்படுகின்றன. பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்கள், அதற்கான உபகரணங்கள் என பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை எதிர் வரும் காலங்களில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாணத்தில் உள்ளக விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் மெய்வல்லுனர் பயிற்சிகள் என்பவற்றை எதிர்காலத்தில் வழங்கக் கூடியதாக இருக்கும். இந்தப் பிரதேசத்தில் நீச்சல் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

விளையாட்டுத் துறையை வவுனியா மாவட்டத்தில் சிறப்பாக முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே காணப்படுகின்ற தீய பழக்கவழக்கங்கள், மது பாவனை, தொலைபேசி பாவைனை, போதைப் பொருள் பாவனை என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டு துறை அவசியம். அந்தவகையில் இந்த விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது, அமைச்சருடன் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 100





# புத்தாண்டை முன்னிட்டு விசேட பாதுகாப்பு திட்டம்

தமிழ், சிங்கள புத்தாண்டை பொதுமக்கள் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

அதன்படி, 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகம் உள்ள நகரங்களில், சிவில் உடையில் புலனாய்வு பிரிவு அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைக்காக போக்குவரத்து பொலிஸார் உட்பட சுமார் 6,000 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


நான்கு வகை நிலத்திலும்
காணி விற்பனைக்கு!
Premium Lands with 100% Legal Security
8 இலட்சம் முதல்
* தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.
விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு
என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!
முல்லை
எழுதுமட்டுவாழ்
மருதம்
கிழக்கு அரியாலை
குறிஞ்சி
மலையகம்
(ஹப்புத்தளை நகர்)
நெய்தல்
மட்டக்களப்பு
(வாவிக் கரையோரம்)
ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு
இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!
இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!
இனிமையான வாழ்விற்கு..!
GOOD GIFT
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
+94 77 743 5557

காலைக்கதிர் Kalaikkathir

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் பரந்துபட்ட சந்திப்புக்களை நடத்தியிருந்தனர். இந்தப் பயணத்தின் முடிவில் இலங்கை தொடர்பில் எவான் பபஜோர்ஜியோவினால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டம் தொடர்பான நான்காம் கட்ட மீளாய்வுக்கு அடித்தளமாக அமையக்கூடிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை முன்னெடுத்தோம்.

சர்வதேச நாணய நிதியத்தினால் அனுசரணையளிக்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் கீழ் இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்புக்கள் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைத்தர ஆரம்பித்திருக்கின்றன. தீவிர நெருக்கடியின் பின்னர் கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாகப் பதிவாகியுள்ளமை பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். அதேபோன்று அண்மைய சில காலாண்டுகளில் பணவீக்கம் சடுதியாகக் குறைவடைந்திருப்பதுடன், 2025 இன் முதலாம் காலாண்டில் அது -2.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. கடந்த மார்ச் மாத இறுதியில் மொத்த கையிருப்புக்களின் பெறுமதி 6.5 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது. செயற்திறன்மிக்க நிதியியல் மறுசீரமைப்புக்களால் பொதுநிதி கையாளுகை வலுப்பெற்றுள்ளது.

அண்மைய காலங்களில் உலகளாவிய தளம்பல்கள் விரிவடைந்திருப்பதுடன், அவை நிலையற்ற நிதியியல் சந்தை நிலைமைகள் தோன்றுவதற்கு வழிகோலியுள்ளன. சமகால வெளியக அழுத்தங்களும், நிலைமாற்றமடைந்துவரும் போக்குகளும் ஏற்கனவே தீவிர நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீண்டுவரும் இலங்கை பொருளாதாரத்தில் நிச்சயமற்றதன்மைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இருப்பினும் வெளியகத் தளம்பல்களால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கும், நாணய நிதியச்செயற்திட்ட அமுலாக்கத்துடன் அவற்றை உரியவாறு கையாள்வது குறித்து ஆராய்வதற்கும் மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது.

எது எவ்வாறிருப்பினும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும், செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதிலும் அரசாங்கம் உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் இருப்பது பாராட்டத்தக்கதாகும். அதேவேளை முன்நோக்கிப் பயணிக்கையில் மிகக்கடின முயற்சியினால் வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத்தக்கவைத்துக்கொள்வதற்கும், நுண்பாகப்பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உயர் வளர்ச்சி என்பவற்றை உள்ளடக்கிய பாதையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டுசெல்வதற்கும் தற்போதைய மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டியது அவசியமாகும்.

மேலோங்கிவரும் உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் நிதியியல் இடைவெளியைப் பேணுவதற்கு நிலையானவருமானத்திரட்டல் முயற்சிகளும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் இன்றியமையாதவையாகும்.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் வறிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரைப் பாதுகாக்கவேண்டிய முக்கிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதற்கமைய அவசியமான தரப்பினருக்கான சமூகப்பாதுகாப்பு செயற்திட்டங்களை வலுப்படுத்துவதுடன் விரிவுபடுத்தவேண்டும்.

அதேவேளை நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியில் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தின் நிபந்தனைகளை உரியவாறு பேணுவதற்கு அவசியமான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் கலந்துரையாடல்கள் தொடரும் - என்று தெரிவித்துள்ளது.

## 2025இல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை அமெரிக்காவினால் விதிக்கப்பட்டிருக்கும் தீர்வை வரிகள் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் ஆசிய அபிவிருத்திவங்கியின் இலங்கைக்கான மூத்த பொருளியலாளர் லிலியா அலெக்சன்யன், ''அமெரிக்காவினால் விதிக்கப்பட்டிருக்கும் தீர்வைகளுக்கு விலக்களிக்கப்படக்கூடும். அல்லது பேச்சு ஊடாக அவ்வரி அறவீட்டு வீதத்தைக் குறைத்துக்கொள்ளமுடியும். அதன் மூலம் சகலரும் குறைந்தளவிலான தாக்கங்களுக்கே முகங்கொடுக்கநேரும்'' எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று இலங்கையின் நிதியியல் மற்றும் நாணயக்கொள்கை முகாமைத்துவம் சிறப்பானதாகக் காணப்படுவதாகவும், அதனூடாக வெளியகக் கடன் பெறுமதி மற்றும் பணவீக்கம் என்பன குறைவடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ள ஆசிய அபிவிருத்திவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்காஃபுமி கடொனோ, இந்த அடைவுகளுக்கு மத்தியிலும், இலங்கையின் மீட்சி இன்னமும் நலிவான நிலையிலேயே இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ''தற்போது பெருமளவுக்குப் பெரும்பாகப் பொருளாதார ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், நீண்டகால அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சிக்கு தற்போதைய கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பது அவசியமாகும். அதுமாத்திரமன்றி உலகளாவிய வர்த்தக அழுத்தங்கள் உள்ளிட்ட பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்குப் பிராந்திய ஒத்துழைப்பை விரிவுபடுத்திக்கொள்வது இன்றியமையாததாகும்'' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## டிப்பர்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்பட்டது. அவரது உடல் உடற்கூறாய்வுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் டிப்பர் சாரதியை மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணை களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று மாலை திருநெல்வேலியில் பாதாரியான பெண்ணை டிப்பர் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்பிவிட்டு பலாலி வீதியில் ஏற முயன்ற டிப்பர் வீதியில் நடந்து சென்ற பெண்ணை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டார். உயிரிழந்த பெண்ணின் உடல் உடல்கூறாய்வுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## கெஹெலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள டபிள்யு-15 ஹோட்டலில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமையவே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

கிரிக்கெட் நிர்வாக சபை, பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு பணம் கொடுத்ததா? என்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னிடத்தில் கேள்விகளை எழுப்பியிருந்ததாக ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் அளித்திருந்தார்.

தரமற்ற நோய் எதிர்ப்புதடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பில் நடைபெறும் விசாரணைகளுக்கு அமைவாக வாக்குமூலம் அளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கடந்த 9ஆம் திகதியும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய ஊழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய இயக்கத்தின் தலைவரும், முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இலஞ்ச, ஊழல் ஒழிப்பை வலியுறுத்திவரும் சிவில் சமூக அமைப்புக்களில் ஒன்றான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் சார்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கும் கரு ஜயசூரிய, அதில் மேலும் கூறியிருப்பதாவது:

நாட்டின் துரித முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிக்கும் நோக்கில் தேசிய ஊழல் ஒழிப்புசெயற்திட்டமொன்றை வெளியிடுவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருப்பதையும், அதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமைத்துவம் வழங்கி செயற்படுவதையும் பெரிதும் வரவேற்கிறோம். அதேவேளை இலஞ்சம் மற்றும் ஊழல் முற்றாக ஒழிக்கப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் நாட்டுமக்களின் விருப்பம் இச்செயற்திட்டத்தின் ஊடாக ஈடேறவேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

2000 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தத்தின் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு மாற்றத்தின் அடைவாகவே நாம் இந்த முயற்சியைக் கருதுகிறோம். அத்தோடு சிவில் சமூகத்தினர் ஒன்றிணைந்து நாட்டின் சிறப்பான எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பொருத்தமான அரசியலமைப்பொன்றை உருவாக்கும் நோக்கில் சகல அரசியல் தரப்புக்களுடனும் இணைந்து செயலாற்றியமையை நினைவுகூருகிறோம். அன்று இம்மாற்றத்துக்கு வழிகாட்டிய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பலர் இன்று எம்மோடு இல்லை. அவர்கள் அனைவரையும் நாம் இவ்வேளையில் நினைவுகூருகிறோம்.

அதேவேளை இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான புதிய சட்டமொன்றை உருவாக்குமாறும், அதற்குரிய கட்டமைப்பை வலுப்படுத்துமாறும் கடந்த சில வருடங்களாக நாடளாவிய ரீதியில் வலியுறுத்தப்பட்டுவந்த நிலையில், அதனை இலக்காகக்கொண்டு முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாட்டில் இயங்கிவரும் சிவில் சமூகத்தினருடன் ஒன்றிணைந்து செயற்பட்டமை பெரிதும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். அதுமாத்திரமன்றி இந்த இலக்கினை அடைந்துகொள்வதற்காக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகத்தினால் அளிக்கப்பட்ட ஒத்துழைப்பினையும் பாராட்டுகிறோம்.

அதன்படி தற்போதைய ஆளும்தரப்பின் பிரதான இலக்கான இலஞ்சம் மற்றும் ஊழலற்ற நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஆளும்தரப்பின் முயற்சியையும், அதற்கு ஜனாதிபதி அளித்துவரும் தலைமைத்துவத்தையும் பெரிதும் பாராட்டுகிறோம் என்று தெரிவித்துள்ளார்.




# உள்ளாட்சி தேர்தல் 2025

## கிண்ணியாவில் நவீன நகர மயமாக்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

### ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் தெரிவிப்பு

(ஹலால்தீன்)

கிண்ணியா நகர சபை தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடும் மெய்யதீன் முஹம்மது மஹ்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

கிண்ணியா நகர சபையில் நாம் வெற்றி பெறுகின்ற போது பின்வரும் திட்டங்களை அமுல்படுத்துவோம்.

துறை சார்ந்தவர்கள், புத்திஜீவிகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிபுணர் குழு உருவாக்கப்படும்.

இக்குழு எமது கிண்ணியா நகர சபையின் எதிர்கால செயற்பாடுகளை வினை திறனுடன் கொண்டு செல்வதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை முன்மொழியும்.

இந் நிபுணர் குழுவானது எமது பிரதேசத்தில் உள்ள அனைத்து துறைகளுக்குமான நீண்டகால, குறுகிய கால திட்டங்களையும் திட்ட முன் மொழிவுகளையும் தயாரிக்கும்.

இக்குழுவினது அனைத்து செயற்பாடுகளும் வெளிப்படைத் தன்மை கொண்டதாக இருக்கும்.

எமது பிரதேசத்தில் அவசியமாக நிறைவேற்றப்பட வேண்டியதும் முக்கியத்துவமானதுமான வேலைத் திட்டங்களின் முன்மொழிவுகளை நேரடியாக சபைக்கோ அல்லது நிபுணர் குழு ஊடாகவோ பொதுமக்கள் எழுத்து மூலம் முன்வைக்கலாம்.

நிபுணர் குழுவின் செயற்பாடுகளுக்கும் வேலை திட்டங்களுக்கும் தேவையான அடிப்படை நிதியினை பெற்றுக் கொள்வதற்காக முதல்வர் நிதியம் உருவாக்கப்படும்.

அனைத்து மாணவர்களுக்கும் ஆன்மீகக் கல்வியை கற்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப் படும்.

அனைவரையும் தொழுகையாளிகளாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

தனியார்கல்விநிலையங்களின்இணக்கப்பாட்டுடன் ஞாயிறு தினங்களில் அஹதியா மற்றும் குர்ஆன் மத்ரசாக்கள் போன்ற ஆன்மீக கல்வி நடவடிக்கைகளுக்காகவாய்ப்புகள்உருவாக்கப்படும்.

நிபுணர் குழுவின் சாத்தியமான பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்பினை சபை முழுமையாக ஏற்கும்.

கிண்ணியா வலயத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் வலயக்கல்வி அலுவலகத்தோடு இணைந்து செயற்படுத்தப்படும்.

விசேட துறைகளில் கல்வி மான்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன் கொண்டு செல்லப்படும்.

நவீனநகரமயமாக்கல்திட்டங்கள்தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

உள்ளூர் போக்கு வரத்துக்கள் ஒழுங்கு படுத்தப்படும்.

கழிவு முகாமைத்துவம் நவீன மயப்படுத்தப் படும்.

வீதி மின் விளக்குகளின் தேவைகள் முழுமைப்படுத்தப் படும்.

உள்ளக வீதிகள் புனரமைக்கப் படும்.

மழை வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக மத்தியப்படுத்தப்பட்ட வடிகான்திட்டம்தயாரிக்கப் பட்டு நடைமுறைப் படுத்தப் படும்.

கடலரிப்பினால்ஏற்படும்பாதிப்புகளைஇல்லாமல் செய்வதற்காக அரிப்புச் சுவர் அமைப்பதற்கான தொடரான முயற்சிகளும் அழுத்தங்களும் மேற்கொள்ளப் படும்

ஊழல் இல்லாத நகர சபை நிருவாகம் உறுதிப்படுத்தப்படும்.

பொது மக்களுக்கான சேவை வழங்கலில் கால தாமதம் குறைக்கப் படும்.

நகரத்தைஅழகுபடுத்துவதற்கானநடவடிக்கைகளும் வேலை திட்டங்களும் தயாரிக்கப்பட்டு செயல் படுத்தப்படும்.

சுயதொழிலுக்கானவாய்ப்புகள்ஏற்படுத்தப்படும்.

சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்கான வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

பாடசாலைமாணவர்களுக்குஆரோக்கியமானதும் நஞ்சற்றதுமான உணவை வழங்குவதற்காக வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

மாணவர்களின் சுயகற்றலை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கட்டையாற்றின் இரு மருங்கிலும் நடைபாதை அமைக்கப் பட்டு ஓய்வுக்கான இருக்கைகளும் தயார் படுத்தப்படும்.

பொதுமக்களுக்கு கிடைக்கப் பெறும் அரசசேவை களின் திறனும் பெறுமானமும் பாதுகாக்கப் படும்.

எம்மால் களமிறக்கப்பட்டிருக்கின்ற வேட்பா ளர்கள் எப்போதும் மக்களோடு மக்களாக இருந்து நேரம் காலம் பார்க்காது சேவைகளை செய்து கொண்டிருப்பவர்கள் என்பதை எமது கடந்த கால செயற்பாடுகள் சாட்சியம் சொல்லும்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் டெலிபோன் சின்னத்திற்கு வாக்களித்து அனைத்து வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்யுமாறு அன்பாக கெட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

## நீர்வேலியில் ஆலயமருகே பிரதமரின் கூட்டம் நேற்று

கோப்பாய் பிரதேச சபைக்கான தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டம் நீர்வேலி வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோவில் முன்றலில் பிரதமரின் மக்கள் சந்திப்பு என்ற பெயரில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில், பிரதமர் ஹரிணி, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளுராட்சி சபை வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் அகலந்துகொண்டிருந்தனர்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்., வழிபாடுகள் மற்றும் மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களுக்காக மதத் தலங்கள் தேர்வு செய்யப்பட்டமை விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இது தேர்தல் விதி மீறல் என்றும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.





## காரைநகரில் நேற்று ஆளும்தரப்பு பரப்புரை

### பிரதமர் ஹரினியும் பங்கேற்றார்

தேசிய மக்கள் சக்தியின் யாழ்.காரைநகர் பிரதேச சபைக்கான தேர்தல் பரப்புரை கூட்டம் நேற்று இடம்பெற்றது.



காரைநகர் கதிர்காம சுவாமி முருகன் கோவில் பகுதியில் பிரதமர் ஹரிணி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், றஜீவன், ஸ்ரீபவானந்தராஜா, தேசிய மக்கள்சக்தியின்யாழ்ப்பாண மாநகர சபை முதன்மை வேட்பாளர் கபிலன், காரைநகர் பிரதேசசபை வேட்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.







காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை மாநகரில் சிறப்பாக நடைபெற்ற சந்தான ஈஸ்வரர்முப்பெரும் இரதோற்சவம்

(சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்திபெற்ற கல்முனை நகர் வளர் கௌரி அம்பிகை உடனுறை சந்தான ஈஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்



திருவிழாவின் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற கல்முனை மாநகர முப்பெரும் இரதோற்சவம் நேற்று (வெள்ளிக்கிழமை) மிகவும் சிறப்பாக நடைபெற்றது.



பெண்கள் ஆண்கள் முண்டியடித்து ஆர்வத்துடன் பக்தி பூர்வமாக தேர் வடம் பிடித்தனர்.

கலை கலாசார பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் பெருந்திரளான பக்தர்கள் முப்பெரும் ரத பவனியில் கலந்து கொண்டனர்.

இவ் ஆலய மகோற்சவத்திருவிழா கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் பகல் இரவுத்திருவிழாக்கள் நடைபெற்று வந்தன.

இன்று (சனிக்கிழமை) காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும் என்று ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் வேலாயுதபிள்ளை செவ்வேட்குமரன் ( பிரபல தமிழ் ஆசிரியர் ) தெரிவித்தார் .

மகோற்சவத்திருவிழா கிரியைகளை மகோற்சவபிரதம குருவான யாழ்ப்பாணம் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி. குககணேசக் குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீராமச்சந்திர தவசீலக் குருக்கள் முன்னிலையில் நடாத்தவந்தார்.

தினமும் பகல் திருவிழா இரவு திருவிழா இடம்பெற்று அன்னதானமும் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் கல்முனை கல்வி வலயத்தில் ஆராய்வு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது 2025 ஆம் கல்வியாண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், கல்விசார் செயற்பாடுகள் தொடர்பாக அதிபர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. மேலும் 2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அடைவு மட்டத்தில் அதிகரிப்பைக் காட்டிய பாடசாலையின் அதிபர்களுக்கு நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கல்முனை கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ,கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்முனை கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கல்முனை கல்வி வலயம் கடந்தாண்டு வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய ரீதியாக இரண்டாம் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# கிழக்கு மாகாண பணிப்பாளராக எந்திரி இராஜமோகன் நியமனம்

(சகாதேவராஜா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கிழக்கு மாகாண பதில் பணிப்பாளராக எந்திரி பரமலிங்கம் இராஜமோகன் நியமிக்கப்பட்டுள்ளார் .

இதுவரை கிழக்கு மாகாண பணிப்பாளராக இருந்த எந்திரி வ.கருணநாதன் கடந்த சனிக்கிழமை சேவையில் இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு எந்திரி ராஜமோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் காலமாகையால் பதில் நியமனமாக கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இவர் திருகோணமலை சென்று கடமையை பொறுப்பேற்றார்.

காரைதீவைச் சேர்ந்த எந்திரி. பரமலிங்கம் இராஜமோகன், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளராக கடமையாற்றி வருகிறார். இந்த வேளையில் கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் இந்த கடமைக்கு மேலதிகமாக மாகாண பணிப்பாளர் கடமையையும் மேற்கொள்ள இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது .

பட்டயப்பொறியியலாளரான இவர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் கிழக்கு மாகாண தலைவராகவும், காரைதீவு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலய தர்மகத்தாவாகவும், கல்முனை லயன்ஸ் கழக தலைவராகவும் மற்றும் பல சமூக சமய அமைப்புகளில் சேவையாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சம்மாந்துறை வாசிக்கு இம்முறை ஜனாதிபதி செயலகத்தின் உதவி

## நிகழ்நிலை விண்ணப்பத்திலிருந்து தெரிவு

(சர்ஜுன் லாபீர்)

ஜனாதிபதி செயலகத்தால் சத்திர சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளுக்காக வழங்கப்பட்டு வரும் நிதியுதவி இம்முறை நிகழ்நிலை மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகின்றது.



ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கமைய பிரதேச செயலகங்களின் ஊடாக நிகழ்நிலை அடிப்படையில் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறுகின்றன.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் முதன்முதலாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட நான்கு நிகழ்நிலை விண்ணப்பங்களிலிருந்து முதல்கட்டமாக ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது.

இவ் நிதியுதவி வழங்கி வைக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த மருத்துவ உதவிற்கான காசோலையை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.பி.எம் ஹுசைன், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.எம்.எம் சாபிர், மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சீ.சீனத் உம்மா, அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ரிபாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுற்குட்பட்ட யூ.எல் சால்தீன் என்பவருக்கு மேற்படி ஜனாதிபதி செயலக நிதியுதவி வழங்கிவைக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

# கப்ராலுக்கு எதிரான வழக்கை விசாரணைக்கு எடுக்க முடிவு

2012 ஆம் ஆண்டு கிரேக்க பத்திரங்களில் பணத்தை முதலீடு செய்ததன் மூலம் ஆளும்தரப்பு 1.8 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தியதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட நால்வருக்கு எதிராக இலஞ்சஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஜூன் 26 முழுமையாக விசாரணை எடுத்துக்கொள்ளப்படும் என கொழும்பு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு வெள்ளிக்கிழமை (04) கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் சபுவித முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் மற்றுமொரு சந்தேக நபரான சந்திரசிறி ஜயசிங்கவின் இறப்பை உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் கையளிக்கப்பட்டன.

அதன் பின்னர், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் திருத்தப்பட்டது.

இதனையடுத்து இந்த வழக்கை ஜூன் மாதம் 26 ஆம் திகதி முழுமையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# மரம் கடத்திய வாகனத்தை விரட்டி பிடித்த பூவரசன்குளம் பொலிஸார்

வவுனியாவில் மரக்கடத்தலில் ஈடுபட்ட வாகனத்தை பொலிஸார் விரட்டிப் பிடித்துள்ளதுடன், அதில் இருந்த இருவர் வாகனத்தை கைவிட்டு ஓடிச் சென்றுள்ளதாக பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வியாழக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, பூவரசன்குளம் பொலிஸார் காலை வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவ் வீதி வழியாக வவுனியா நோக்கி வந்த பிக்கப் ரக வாகனம் ஒன்று நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து குறித்த வாகனத்தைப் பூவரசன்குளம் பொலிஸார் விரட்டிச் சென்றனர். இதன்போது குறித்த வாகனம் வவுனியா, விநாயகபுரம் பகுதியில் வேகமாக சென்று கொண்டு இருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்துக்குளானதும், அதன் சாரதியும் அதில் இருந்த மற்றைய நபரும் தப்பி ஓடிய நிலையில் 5 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளுடன் குறித்த வாகனம் பொலிஸாரால் கைப்பட்டுள்ளதுடன், வாகன சாரதி மற்றும் அதில் பயணித்தவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் பூவரசன்குளம் பொலிசார் மேலும் தெரிவித்தனர். 100




## பொலிஸ் காவலில் நடந்த

# இளைஞனின் சாவு குறித்து சிஐடி விசாரணை தொடக்கம்

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் இருந்த இளைஞன் மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளதுடன், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் நடந்து கொண்டதாகவும் பொலிஸார் தெரிவினர்.

வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவல பகுதியில் கடந்த முதலாம் திகதி வீடொன்றினுள் நபர் ஒருவர் அத்துமீறி நுழைந்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் அறியக்கிடைத்திருந்த நிலையில், அதிகாரிகள் குழுவினர் சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்குச் சென்று அந்நபரை கைது செய்துள்ளனர்.

மேலும் வீட்டிற்குள் நுழைந்த நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் அவர் மனநலக் கோளாறால் பாதிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும் விதத்தில் நடந்து கொண்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆகையால் வீட்டிலிருந்தவர்களின் பாதுகாப்புக் கருதி உடனடியாக இளைஞனை பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பொலிஸ் நிலையத்தில் வைத்து பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அவர் நடந்துக் கொண்டுள்ளதுடன், அதிகாரிகளால் அவரை கட்டுப்படுத்த முடியாத நிலையில் அறைச் சுவரில் பல தடவை மோதிக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அதிகாரிகள் சந்தேகநபரான இளைஞனை முல்லேரியா மனநல மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். எவ்வாறெனினும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சந்தேகநபர் மறுநாள் புதன்கிழமை அதிகாலை உயிரிழந்துள்ளார். 26 வயதுடைய பதுளை, மீகஹகிவுல பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. மரணத்துக்கான உறுதிப்படுத்தப்பட்ட காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் இளைஞனின் மரணம் தொடர்பில் நுகேகொடை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் ஆலோசனைக்கமைய நுகேகொடை குற்றப் புலனாய்வு பணியக அதிகாரிகளால் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# செயலமர்வு

(ஹஸ்பர்)

2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பாக தமிழ் மொழிபேசும் சிரேஸ்ட தலைமை தாங்கும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலரின் வகிபாகம், நியமனம் கிடைத்த பின் பூர்வாங்க தயார்படுத்தல், வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னைய நாள் கடமைகள், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்கெண்ணலுக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல், வாக்களிப்பு நிலையமொன்றின் அமைப்பு, முன்கூட்டியே பூரணப்படுத்த வேண்டிய படிவங்கள், வாக்கெடுப்பு தின நடவடிக்கைகள், வாக்களிப்பு நிலைய முகவர்கள், சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலரின் முத்திரை, இரகசியத்தை பற்றிய உறுதியுரை, வாக்கெடுப்புக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டிய கடமைகள், வாக்கெடுப்பு நிலையத்தில் ஏனைய எழுதுநர்களின் நடவடிக்கைகள், வாக்களிப்பு நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அடையாள அட்டைகள், தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள், வாக்கெடுப்பு நிலையத்திற்குள் அல்லது அதனை சூழவுள்ள பகுதிகளில் தடை செய்யப்பட்ட நடத்தைகள், வாக்கெடுப்பை முடிவுறுத்தல், வாக்கெடுப்பு முடிவடைந்ததும் வாக்குப்பெட்டியைபொறியிடும் முறை, சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலரின் டி அறிக்கை, வாக்கெண்ணலின் ஆரம்ப நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவி தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன் மற்றும் மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளர் எஸ். கே. டி. நிரஞ்சன் ஆகியோரால் தெளிவூட்டப்பட்டன.

இச்செயலமர்வில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் குகதாசன் சுகுணதாஸ் மற்றும் சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் போக்குவரத்தை இலகுவாக்க 'மெரின் டிரைவ்' பாதை மக்கள் பாவனைக்கு

சனநெரிசல் கூடிய கல்முனை மாநகரத்தின் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், கல்முனை மாநகரத்திற்கு வர்த்தக நோக்கத்திற்காக வரும் வெளியூர் வர்த்தகர்கள், பயணிகளின் அசௌகரியத்தை குறைக்கவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் முயற்சியின் பயனாக கார்பட் வீதியாக புனரமைக்கப்பட்ட நிந்தவூர்- பெரியநீலாவணையை இணைக்கும் மெரின் டிரைவ் கடலோரப் பாதை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்களின் ரி-100 திட்டத்தின் கீழ் சுமார் 65 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை மாநகர பிரதேசத்தை குறிப்பாக சாய்ந்தமருது, கல்முனை மற்றும் மருதமுனையை ஊடறுக்கும் இந்த மெரின் டிரைவ் திட்டத்தின் முதலாம் கட்டம் நிறைவடைந்துள்ளது.

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய மீன் சந்தை உட்பட கடல்சார் வியாபார நிலையங்களை நிறையவே கொண்டுள்ள இப்பிராந்திய வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மை கருதி செய்யப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டமானது பிராந்திய பொருளாதார வளர்சிக்கும், மக்களின் இலகுவான போக்குவரத்துக்கும் உதவியாக அமைந்துள்ளது. இப்பாதையில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்து மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பாதையின் பயன்பாடுகள் மற்றும் மேலதிக அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய






முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் அவர்கள் அண்மையில் கள விஜயமொன்றை மேற்கொண்டு ஆராய்ந்தார். இதன்போது முன்னாள் நாடாராளுமன்ற உறுப்பினின் மக்கள் தொடர்பாடல், ஊடக விவகார செயலாளர் நூருல் ஹுதா உமர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# திருமலை ஸ்ரீ பத்திரகாளி ஆலயத் தேர்த் திருவிழா



திருகோணமலை அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவானது வியாழக்கிழமை அம்பிகையின் பக்தர்களின் பேராதரவுடன் ஆதீனகர்த்தா வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 5.00 மணிக்கு மூலஸ்தான பூஜையும், தம்பபூஜையும், 6.15 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் நடைபெற்று, 8.00 மணியளவில் அம்பாள் தேரில் ஆரோகணித்து, விநாயகரும், முருகனும் முன்னே வர அம்பாள் தனக்கென அமைக்கப்பட்ட சித்திரத்தேரினில் பவனி வந்து அடியார்களுக்கு காட்சியளித்தார்.

தேருக்கு பின்னால் அம்பிகையின் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதை காணக்கூடியதாக இருந்ததுடன் மாணவ மாணவிகளின் இசை, நடனநிகழ்வுகளும் மற்றும் பக்தர்களின் தாகத்தை தீர்க்க போதியளவிலான தண்ணீர் பந்தல்களும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மாலை 6.00 மணிக்கு மகா ரிஷப வாகனத் திருவிழாவும் பச்சைமேனி அருட்காட்சியும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இந்நிகழ்வில் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் மற்றும் அம்பிகையின் பக்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



### மாற்றுவலுவுள்ளோருக்கான போட்டியில்

# தேசிய மட்டத்தில் முதலிடம்பெற்றோர் கிளிநொச்சியில் நேற்றுக் கௌரவிப்பு



தேசிய மட்ட மாற்றுவலுவுள்ளோருக்கானபோட்டியில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மாவட்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான விளையாட்டு நிகழ்வு கடந்த 03-04-2025 அன்று ஹோமாகம மஹிந்த ராஜபக்ஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



25 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திமாற்றுவலுவுள்ளோர் கலந்து கொண்டனர். குறித்த போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 21 வீர வீராங்கனைகள் கலந்து கொண்டிருந்தனர். குறித்த போட்டியில் கிளிநொச்சி மாவட்டம் 50 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தை பெற்றுக்கொண்டது. குறித்த போட்டியில் 6 தங்கப் பதக்கதையும் 10 வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர்.



43 புள்ளிகளைப்பெற்று கம்பஹா மாவட்டம் இரண்டாம் இடத்தினையும் 36 புள்ளிகளைப்பெற்றுமுல்லைத்தீவுமாவட்டம் மூன்றாம்இடத்தைப்பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த கௌரவிப்பு நிகழ்வில் மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ்-முரளீதரன், மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாற்றுவலுவுள்ளோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். 316



காலைக்கதிர்
Kalaikkathir

# வீதியால் செல்லும் பெண்களிடம் தொடர்ந்து சங்கிலி அறுத்தவர் கைது

## சந்தேகநபர் ஒரு படைச் சிப்பாய்

வவுனியாவின் பல பகுதிகளிலும் வீதியால் சென்ற பெண்களை பின் தொடர்ந்து சென்று சங்கிலி அறுத்து வந்ததாக வவுனியாவில் பணியாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வியாழக்கிழமை வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக இடம்பெற்ற சங்கிலி அறுப்பு சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விஜய சோமமுனி அவர்களின் அறிவுறுத்தலின் கீழ், மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலகவின் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்க, அசங்க மற்றும் பொலிஸ் கொன்ஸ்தாபில்களான சிந்நக்க, விதுசன், பொலிஸ்சாரதி திசாநாயக்க உள்ளிட்ட குழுவின் மேற்கொண்ட நடவடிக்கையின் போது மோட்டர் சைக்கிளுடன் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இராணுவ வீரரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும், கடந்த ஜனவரி முதலாம் திகதி வேப்பங்குளம், 6 ஆம் ஒழுங்கை பகுதியில் பெண் ஒருவரிடம் 2 பவுண் சங்கிலியும், கடந்த மார்ச் 31 ஆம் திகதி கூமாங்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும், இம் மாதம் முதலாம் திகதி நெளுக்குளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும், இராசேந்திரகுளம் பகுதியில் பெண் ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலியும் அறுத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த நபர் கடமை இல்லாத நேரங்களில் சங்கிலி அறுப்பு சம்பவங்களுக்கு பயன்படுத்திய அவரது சொந்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதுடன், அறுக்கப்பட்ட சங்கிலிகளும் அடைவு வைத்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாமில் பணியாற்றும் மிகிந்தலையைச் சேர்ந்த 30 வயதுடைய இராணுவ வீரரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100

# மேய்ச்சல் தரை பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு காணப்படுமாம்

## திலகநாதன் எம்.பி. தெரிவிப்பு




மேய்ச்சல் தரை பிரச்சினைக்கும் விரைவில் தீர்வு காணப்படும் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்தார்.

வனவள மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்துடன் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் வியாழக்கிழமை கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

விவசாயிகள் தொடர்பாக எமது அரசாங்கம் கவனம் செலுத்தி அவர்களுக்கு சாதகமான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேபோல் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் மேய்ச்சல் தரை தேவை காணப்படுகின்றது. அதற்காக கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை வனப் பிரதேசத்தில் மேய்சலில் ஈடுபடுத்துவதற்கும் நாம் வனவள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளோம். இதற்கு சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

எனவே, கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் எதிர்காலத்தில் எமது அரசாங்கம் சிறந்த தீர்வைத் தரும். வன்னி வாழ் மக்களே நீங்கள் தேசிய மக்கள் சக்தியை பலப்படுத்துவதன் மூலம் உங்களுக்கான தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.04.2025இல் வெளியிடப்பெற்றது